முகாமையாளர், மக்கள் வங்கி

……………………………..……..கிளை

# இலத்திரனியல் வங்கி சேவைக்கான விண்ணப்பம்

PEOPLE'S BANK
The Bank of the People

னுஎனக்கு/எமக்கு பின்வரும் வசதியை/வசதிகளை வழங்கும்படி கேட்டுக்கொள்ளுவதோடு அதற்காக எனது/எமது விபரங்களை கீழே குறிப்பிட்டுள்ளவாறு சமர்ப்பிக்கிறேன்/றோம்.

## சேவை வகை

*(தயவுசெய்து உரிய கூட்டில் "√" அடையாளம் இடுக)*

- ☐ பற்று அட்டைகள் (Debit Card)
- ☐ இலத்திரனியல் கூற்று (E-Statement)
- ☐ கையடக்க தொலைபேசி வங்கி வசதி (Mobile Banking (#488#))
- ☐ (Missed Call Top Up Banking)
- ☐ குறுஞ் செய்தி சேவை ( SMS Alerts)
- ☐ அட்டை இன்றி கணக்கிலிருந்து பணம் மீளப் பெறுதல் (Cardless Cash)

## தனிப்பட்ட தகவல்கள்

| முதன்மை கணக்கு உரிமையாளர் | | கூட்டு கணக்கு உரிமையாளர் | |
|---|---|---|---|
| முழுப் பெயர் (திரு/திருமதி/ஏனையவை………………..) | | முழுப் பெயர் (திரு/திருமதி/ஏனையவை………………..) | |
| தபால் முகவரி | | தபால் முகவரி | |
| தே.அ.அ/கடவுச்சீட்டு / சாரதி அனுமதிப்பத்திர இல | | தே.அ.அ/கடவுச்சீட்டு / சாரதி அனுமதிப்பத்திர இல. | |
| கையடக்க தொலைபேசி இலக்கம் | | கையடக்க தொலைபேசி இலக்கம் | |
| நிலையான தொலைபேசி இலக்கம் | | நிலையான தொலைபேசி இலக்கம் | |
| மின்னஞ்சல் முகவரி | | மின்னஞ்சல் முகவரி | |

## பற்று அட்டை

கணக்கு இல. 1 ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

கணக்கு இல. 2 ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

☐ விசா ☐ மாஸ்டர் ☐ துரித அட்டை ☐ பெயர் குறிப்பிடப்பட்ட அட்டை*

| | முதன்மை கணக்கு உரிமையாளர் | கூட்டு கணக்கு உரிமையாளர் |
|---|---|---|
| அட்டையில் குறிப்பிட வேண்டிய பெயர் *(பெயர் குறிப்பிடப்பட்ட அட்டைகளுக்காக)* | | |
| தாயின் திருமணத்திற்கு முன்னரான பெயர் | | |

தேவையான வசதிகள் (தயவுசெய்து உரிய கூட்டில்" √"அடையாளமிடுக)

| | முதன்மை கணக்கு உரிமையாளர் | கூட்டு கணக்கு உரிமையாளர் |
|---|---|---|
| ** அட்டைக்கு உரிய அனைத்து வசதிகள் | | |
| ATM கொடுக்கல் வாங்கலுக்கு மாத்திரம் | | |

இலத்திரனியல் வாணிப இணையத்தள கொடுக்கல்வாங்கல்களுக்கு உரியதாக ஒருமுறை மாத்திரம் உருவாகின்ற கடவுச் சொல்லை (OTP) அனுப்ப வேண்டிய கையடக்க தொலைபேசி இலக்கம்? ☐

***இலத்திரனியல் வாணிப இணையத்தள கொடுக்கல்வாங்கல்களுக்கு உரியதாக ஒருமுறை மாத்திரம் உருவாகின்ற கடவுச் சொல்லை (OTP) மேற் குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்புவதற்காக நான்/நாம் இத்தால் அதிகாரம் அளிக்கின்றேன்/அளிக்கின்றோம்.

……………………………………………………………………
வாடிக்கையாளரின்/களின் கையொப்பம்/ஒப்பங்கள்

*** உங்கள் கொடுக்கல்வாங்கலுக்கு உரிய ஒருமுறை மாத்திரம் உருவாகின்ற கடவுச் சொல் (OTP) நீங்கள் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளுகின்ற இணையத்தளம் முப்பரிமாண பாதுகாப்பு முறைமையில் பதிவுசெய்திருந்தால் மாத்திரம் உருவாகும் என்பதை கவனத்திற் கொள்ளவும்.

### அலுவலக பாவணைக்கு மாத்திரம்

| | முதன்மை கணக்கு உரிமையாளர் | கூட்டு கணக்கு உரிமையாளர் |
|---|---|---|
| அட்டை இலக்கம் | | |

## இலத்திரனியல் கணக்கு கூற்று

கணக்கு இல
1 ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐
2 ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐
3 ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐
4 ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

தயவுசெய்து உரிய கூட்டில் "√ "அடையாளமிடுக

☐ முதன்மை கணக்கு உரிமையாளர் ☐ கூட்டு கணக்கு உரிமையாளர்

☐ தினசரி ☐ வாராந்தம் ☐ மாதாந்தம்

### அலுவலக பாவணைக்கு மாத்திரம்

கிளை முகாமையாளரின் அங்கீகாரம்

……………………………………………………………………
வாடிக்கையாளரின்/களின் கையொப்பம்/ஒப்பங்கள்

…………………………………..……
கையொப்பம்
(பெயர், சேவை இலக்கம்) இறப்பர் முத்திரை

திகதி :

* அட்டையை ஒப்படைக்கும் திகதியை கிளை அறிவிக்கும்
** வங்கி வழங்குகின்ற வசதிகளுக்கு உட்பட்டு

## கையடக்க தொலைபேசி வங்கி வசதிகள்

**பீப்பல்ஸ் மொபைல் பேங்கிங் - (*USSD Technology - #488#*)** *தயவுசெய்து உரிய கூட்டில் "√ " அடையாளமிடுக*

☐ முதன்மை கணக்கு உரிமையாளர் ☐ கூட்டு கணக்கு உரிமையாளர்

**USSD** தொழில்நுட்பத்தின் கீழ் பாவனை பட்டியல்களைச் செலுத்தும் வசதி (தயவுசெய்து பட்டியலில் உள்ள தொடர்பு/கணக்கு இலக்கத்தை பதிக)

CEB (இலங்கை மின்சார சபை)

ஸ்ரீ லங்கா ரெலிகொம்

மொபிடெல்

லங்கா பெல்

நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

டயலொக்

டயலொக் TV

வ/ப இலங்கை மின்சார (தனியார்) கம்பெனி (LECO)

எட்டிசலாட்

பீப்பல்ஸ் அட்டை

ஏனையவை (தயவுசெய்து குறிப்பிடுக)………………..

இணைக்க வேண்டிய கணக்குகள் (இணைக்கப்பட்ட கணக்குகளில் ஒரு கணக்கை பற்றாக்கி பாவனை பட்டியல் செலுத்தப்படும்)

1

2

3

4

……………………………………………………………………………

வாடிக்கையாளரின்/களின் கையொப்பம்/ஒப்பங்கள்

➢ **Missed Call Top Up Banking வசதிகள்**

வசதி தயவுசெய்து உரிய கூட்டில் " √"அடையாளமிடுக

☐ முதன்மை கணக்கு உரிமையாளர் ☐ கூட்டு கணக்கு உரிமையாளர்

*பதிவுசெய்யப்பட்ட சேவை வழங்குநர்களிடமிருந்து மாத்திரம் இந்த வசதியைப் பெற்றுக்கொள்ள முடியும்.*

……………………………………………………………………………

வாடிக்கையாளரின்/களின் கையொப்பம்/ஒப்பங்கள்

➢ **டிஜிட்டல் மயமான கையடக்க தொலைபேசி வங்கி வசதி (People`s Wave)**

- *ANDROID* 4.4க்கு மேற்பட்ட வகை மற்றும் *APPLE (IOS)* 8.0க்கு மேற்பட்ட வகை தொ.பே. உரிமையாளர்களுக்காக
- கையடக்க தொ.பேசி *ANDROID* வகையெனில்*Play Store* மூலமும், *APPLE (IOS)* வகை எனில் *App Store* மூலமும் *People`s Wave* செயலியை *(App)* பதிவிறக்குக.

## குறுஞ்செய்தி சேவை வசதி (வங்கி வழங்குகின்ற சேவைகளுக்கு உட்பட்டு)

குறுஞ்செய்தி சேவைக்காக பதிவுசெய்யும் கணக்கு இல.

1

2

3

4

தயவுசெய்து உரிய கூட்டில் "√ "அடையாளமிடுக

| | முதன்மை கணக்கு உரிமையாளர் | கூட்டு கணக்கு உரிமையாளர் |
|---|---|---|
| Debit Alerts (பற்று கொடுக்கல்வாங்கலுக்கான குறுஞ்செய்தி) | | |
| Credit Alerts (வரவு கொடுக்கல்வாங்கலுக்கான குறுஞ்செய்தி) | | |
| Time Deposit Renewals (நிலையான வைப்புகளைப் புதுப்பித்தலுக்கான குறுஞ்செய்தி ) | | |

……………………………………………………………………………

வாடிக்கையாளரின்/களின் கையொப்பம்/ஒப்பங்கள்

## அட்டை இன்றி கணக்கிலிருந்து பணம் மீளப் பெறுதல்

அட்டை இன்றி கணக்கிலிருந்து பணம் மீளப்பெறும் வசதிக்காக பதிவுசெய்ய வேண்டிய கணக்கு இலக்கம் / இலக்கங்கள்

1

2

3

4

……………………………………………………………………………

வாடிக்கையாளரின்/களின் கையொப்பம்/ஒப்பங்கள்

## பற்று அட்டைகளுக்கு ஏற்புடையதான நியதிகளும் நிபந்தனைகளும்

1. அட்டை எப்பொழுதும் மக்கள் வங்கியின் சொத்தாக இருக்க வேண்டும். அத்துடன் வங்கி கேட்கும்போது அதை நிபந்தனை இன்றியும் தாமதம் இன்றியும் வங்கிக்கு திருப்பி மாற்றுதல்க்க வேண்டும்.
2. அட்டை எனது தனிப்பட்ட பாவணைக்கு மாத்திரமே. அந்த அட்டையை ஏனைய பணிகளுக்குப் பயன்படுத்தலாகாது.
3. எனது/எமது தனிப்பட்ட அடையாள இலக்கத்தை (PIN) நான்/நாம் மிக இரகசியமாக வைத்துக்கொள்ளுவதோடு, அந்த இலக்கத்தை எவருக்கும் “எந்த சந்தர்ப்பத்திலும்” வெளிப்படுத்துவதில்லை என வாக்குறுதி அளிக்கிறேன்/றோம். அட்டை தொடர்பில் தனிப்பட்ட அடையாள இலக்கம் (PIN) என்பது வங்கி எனக்காக/எமக்காக அந்தரங்கமாகத் தயாரித்த மூல தனிப்பட்ட அடையாளம் காணும் இலக்கம் மற்றும் நான்/நாம் செய்த பதிலீடு என கருதப்பட வேண்டும்
4. அட்டையை எந்த விதத்திலாவது பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற அல்லது நிறைவேற்றுகின்ற அனைத்து கொடுக்கல்வாங்கல் தொடர்பாக முழுப் பொறுப்பை நான்/நாம் ஏற்றுக்கொள்ளுகிறேன்/கிறோம்.
5. பற்று அட்டைக்கு உரிய எனது தனிப்பட்ட அடையாள இலக்கத்தைப் (PIN) பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு மீளப் பெறும்/மாற்றுதல் செலுத்தீட்டு தொகையை எனது/எமது கணக்கில் பற்று வைக்கும்படி நான்/நாம் இத்தால் உங்களுக்கு அதிகாரம் அளிக்கிறேன்/கிறோம்.
6. குறித்த எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அட்டையின் மூலம் உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல் தொடர்பாக அனைத்து கட்டணங்களையும் அட்டையைப் பயன்படுத்துவது தொடர்பான சட்டபூர்வ கட்டணங்கள் அல்லது ஏனைய நியதிச்சட்ட கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் உள்ளடக்கிய ஏனைய பற்றுக்களையும் எனது/எமது கணக்கில் பற்று வைப்பதற்கு நான்/நாம் மேலும் உங்களுக்கு அதிகாரம் அளிக்கிறேன்/கிறோம்.
7. எனது/எமது கணக்கு கூட்டு கணக்காக இருந்தால் அட்டையைப் பயன்படுத்துவதன் மூலம் எழுகின்ற அனைத்து கொடுக்கல் வாங்கல் தொடர்பாக நான்/நாம் இணைந்தும் தனித்தனியாகவும் பொறுப்புக்கூற கட்டுப்படுகிறேன்/றோம்.
8. அட்டையின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அனைத்து கொடுக்கல்வாங்கல் தொடர்பான வங்கியின் அறிக்கையும் கூற்றும், அனைத்து நோக்கங்களுக்கும் என்னையும்/எம்மையும் தீர்க்கமாகவும் பிணைப்புக்கும் கட்டுப்படுத்துகிறது என்பதை நான்/நாம் ஏற்றுக்கொள்ளுகிறேன்/றோம்.
9. நான்/நாம் பெற்றுக்கொண்ட அட்டை களவாடப்பட்டால், காணாமற்போனால் நான்/நாம் அதுபற்றி உடனே வங்கிக்கு அறிவிப்பதோடு, எழுத்துமூல அறிவித்தலும் வங்கிக்கு வழங்கப்படும். களவாடப்பட்ட, காணாமற்போன அல்லது எனது/எமது அதிகாரம் இன்றி அட்டையைப் பயன்படுத்துவதன்மூலம் ஏற்படக்கூடிய ஏதேனும் நட்டம் தொடர்பில் வங்கி பொறுப்புக் கூறாது.
10. வங்கியின் முழுமையான அங்கீகாரத்திற்கு அமைவாக எனக்கு/எமக்கு அறிவித்து அல்லது அறிவிக்காமல் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் எதையாவது திருத்துவதற்கு பரிபூரணப்படுத்துவதற்கு அல்லது சிறிய அளவில் மாற்றுவதற்கு வங்கிக்கு உரித்து உண்டு. அத்துடன் அந்த திருத்தத்தின் மூலம் பரிபூரணப்படுத்துதல் அல்லது சிறிய அளவில் மாற்றுதல் என்பவற்றிற்கு நான்/நாம் பிணைப்புக்கு உள்ளாகிறேன்/றோம்.
11. அட்டையைப் பயன்படுத்தும் போது வங்கியில் தற்பொழுது நடைமுறையில் உள்ள விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கும் “அட்டையின் மூலம் உள்ளடக்கப்படுகின்ற அனைத்து சேவைகள்” வசதிகள் மற்றும் கொடுக்கல்வாங்கலைக் கட்டுப்படுத்துகிற ஏதேனும் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட வேண்டும்.
12. எனக்கு/எமக்கு வழங்கப்பட்ட பூர்வாங்க அறிவித்தல் /அல்லது காரணம் காட்டுதல் இன்றி அட்டையை இரத்துச் செய்தல் மீளப் பெற்றுக்கொள்ளுவதற்கு அல்லது புதுப்பிப்பதற்கு முழுமையான தற்றுணிபு வங்கிக்கு உண்டு. அட்டையைப் பயன்படுத்துவதை முடிவுறுத்துவதற்கு நான்/நாம் தீர்மானிக்கும்போது 7 நாட்களுக்கு குறையாத காலத்திற்கு முன்னர் வங்கிக்கு எழுத்துமூலம் அறிவித்து நான்/நாம் அட்டையை உடனே மீள மாற்றுதல்ப்பதற்கு உடன்படுகிறேன்/றோம்.
13. அட்டை தொடர்பான அனைத்து மீள வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் குறித்த சந்தர்ப்பத்தில் வலுவில் உள்ள நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட வேண்டும்.
14. ஏதேனும் காரணத்திற்காக அட்டையின் பணக் கொடுப்பனவு மறுக்கப்பட்டால் வங்கி அதற்குப் பொறுப்புக்கூறாது.
15. மீளப் பெறுதலை அல்லது மாற்றுதலை உள்ளடக்கும் அளவுக்கு போதியளவு நிதியம் எனது/எமது கணக்கில் இருந்தாலன்றி நான்/நாம் அட்டையைப் பயன்படுத்துவது அல்லது எந்த சந்தர்ப்பத்திலும் பயன்படுத்த முயலுவது இல்லை.
16. தானியங்கி டெலர் இயந்திரத்தின் திரையில் அல்லது விசாரணை துண்டில் அல்லது பற்றுச்சீட்டு அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பணத் தொகையை ஏதேனும் ஒரு தேவைக்காக வங்கியில் உள்ள எனது/எமது கணக்கின் நிலை தொடர்பாக தீர்க்கமாகக் கருதப்பட மாட்டாது என்பதை நான்/நாம் ஏற்றுக்கொள்ளுகிறேன்/றோம்.
17. அட்டையில் அல்லது தானியங்கி டெலர் இயந்திரத்தில் ஏதேனும் பிழையான செயற்பாடு அல்லது செயற்படாமை அல்லது தானியங்கி டெலர் இயந்திரத்தில் இருக்கும் பணம் போதாமை போன்ற காரணங்களுக்காக ஏதேனும் ஒரு வகையில் ஏற்படுகின்ற ஏதேனும் நட்டம் அல்லது சேதம் தொடர்பாக வங்கி எந்த விதத்திலும் பொறுப்புக் கூறாது.
18. நடைமுறை, சேமிப்பு அல்லது ஏனைய ஏதேனும் கணக்கொன்றின் செயற்பாட்டை கட்டுப்படுத்துகிற அனைத்து சட்டங்கள் ஒழுங்குவிதிகள் அந்த கணக்கு தொடர்பிலான அட்டை கொடுக்கல்வாங்கலுக்கும் ஏற்புடையதாக வேண்டும்.
19. நான்/நாம் அட்டையை வெளிநாடொன்றில் பயன்படுத்தும்போது வங்கி எனக்கு வழங்கியுள்ள வரையறைக்குள் மாத்திரம் கொள்வனவுசெய்வேன் என உறுதி கூறுகிறேன். அத்துடன் பிரயாண செலவு, ஹோட்டல் கட்டணம் அமைய செலவுகள்,மருத்துவ செலவுகள் மற்றும் தனிப்பட்ட பயன்பாட்டுக்காக பொருட்களைக் கொள்வனவுசெய்தல் போன்ற தனிப்பட்ட செலவுகளுக்கு மாத்திரம் வெளிநாடுகளில் அட்டையைப் பயன்படுத்துவதாக நான்/நாம் உறுதி கூறுகிறேன்/றோம். பாரியளவில் பணத்தை ஈடுபடுத்துகிற கொடுக்கல்வாங்கல் மற்றும் வாணிப அளவுகளில் பொருட்களைக் கொள்வனவு செய்தல் அல்லது இறக்குமதி செய்தல் தொடர்பாக பணம் செலுத்துவதற்கு நான்/நாம் அட்டையைப் பயன்படுத்த மாட்டேன்/டோம். அத்துடன் அட்டையைப் பயன்படுத்தி வாணிப அளவுகளில் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக அல்லது இலங்கைக்கு வெளியில் நாடொன்றுக்கு மூலதன கொடுக்கல்வாங்கலுடன் தொடர்புபட்ட பண மாற்றுதல்ப்புகளை எனக்காக/எமக்காக மூன்றாம் தரப்பு மேற்கொள்ளாதிருப்பதற்கு நான்/நாம் உறுதிப்படுத்துகிறேன்/றோம்.
20. இலங்கை மத்திய வங்கியினால் இலத்திரனியல் நிதிய பரிமாற்றல் அட்டைகள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள மற்றும் இனிவரும் நாட்களில் வெளியிடப்படவுள்ள விதிகள் மற்றும் நியதிகளுக்கு கீழ்படிவதற்கு நான்/நாம் உடன்படுகிறேன்/றோம்.
21. அட்டை பயன்பாட்டின்போதும் காணாமற்போகும்போதும் அட்டை கொடுக்கல்வாங்கல் தொடர்பான கருத்து வேறுபாடுகளைத் தீர்ப்பதற்காக ஏற்புடையதான கட்டணங்களையும் அறவீடுகளையும் வங்கியினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற வீதத்தின் கீழ் செலுத்துவதற்கு நான்/நாம் உடன்படுகிறேன்/றோம்.
22. நான்/நாம் வெளிநாட்டுக்குச் செல்லும்போது அட்டையைப் பயன்படுத்த கருதினால் வெளிநாடு செல்லுவதற்கு முன்னர் அதுபற்றி வங்கிக்கு அறிவிப்பதற்கு உடன்படுகிறேன்/றோம்.
23. வழங்கியில் (server) பதிவுசெய்துகொண்டவுடன் அட்டை 3D Secured இலத்திரனியல் வாணிப இணையத்தள கொடுக்கல்வாங்கலுக்கு செயற்படும்.
24. முப்பரிமாண பாதுகாப்பு இணையத்தளம் ஊடாக கொடுக்கல்வாங்கல் மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பத்தில் உருவாகின்ற ஒருமுறை மாத்திரம் உருவாகின்ற கடவுச் சொற்கள் (OTPs) கணக்கு உரிமையாளரின் மேற்குறிப்பிடப்பட்ட தொலைபேசி இலக்கத்திற்கு கிடைக்கும்.
25. முப்பரிமாண பாதுகாப்பு இணையவழி இலத்திரனியல் வாணிப கொடுக்கல்வாங்கலை மேற்கொள்ளுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வாடிக்கையாளர் ஒருமுறை மாத்திரம் உருவாகின்ற கடவுச் சொல்லை (OTP) முறைமையில் பதிய வேண்டும்.
26. இலத்திரனியல் வாணிபகொடுக்கலுக்காக பற்று அட்டை தகவல்களையும் வாடிக்கையாளர்களின் தகவல்களையும் வழங்குவதன் மூலம் ஏற்படக்கூடிய நட்டங்கள் தொடர்பாக அல்லது மேலுள்ள விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பாக அல்லது ஒருமுறை மாத்திரம் உருவாகின்ற கடவுச் சொல்லை தவறாகப் பயன்படுத்துவது தொடர்பாக வங்கி பொறுப்பேற்காது.
27. கொடுக்கல்வாங்கல் மேற்கொள்ளப்படுகின்ற இணையத்தளத்தின் சரியான தன்மை அல்லது கொடுக்கல்வாங்கலுக்காக வழங்கப்படுகின்ற வாடிக்கையாளரின் தகவல்களின் அந்தரங்கத்தன்மை தொடர்பாக வங்கி பொறுப்புக்கூற மாட்டாது. அத்துடன், கொடுக்கல்வாங்கலுக்காக இணையத்தளம் மற்றும் கொடுப்பனவு இணைய வாயிலைத் தெரிவுசெய்யும் தீர்மானம் தொடர்பான முழுப்பொறுப்பும் வாடிக்கையாளரையே சேரும்.
28. இலத்திரனியல் நிதிய பரிமாற்றல் அட்டைகள் (EFTC) கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்காக இலங்கை பிரசைகளுக்கு (அட்டை உரிமையாளர்கள்) வழங்கப்படும்.
    i. வாணிப நோக்கில் மேற்கொள்ளுகின்ற இறக்குமதி ஏற்றுமதிக்கு செலுத்தீடுகளைச் செலுத்துவதைத் தவிர்த்து தனிப்பட்ட தன்மையிலான தற்கால கொடுக்கல்வாங்கலுக்கு இலங்கைக்கு வெளியில் வதிகின்ற ஒருவருக்கு செலுத்தீடுகளைச் செலுத்துவதற்காக
    ii. வியாபார வெளிநாட்டு நாணய கணக்கிற்கு (BFCA) தனிப்பட்ட வெளிநாட்டு நாணய கணக்கிற்கு (PFCA) எதிராக வழங்கப்பட்ட அட்டையின் மூலம் எந்தவொரு நோக்கத்திற்காகவும் இலங்கைக்கு வெளியில் வதிகின்ற ஒருவருக்கு செலுத்தீடுகளைச் செலுத்துவதற்காக
    iii. தூதரக வெளிநாட்டு கணக்கிற்கு (DFA) அல்லது உள்வரும் முதலீட்டு கணக்கிற்கு (IIA) எதிராக வழங்கப்பட்ட அட்டையின் மூலம் எந்தவொரு நோக்கத்திற்காகவும் இலங்கைக்கு வெளியில் வதிகின்ற ஒருவருக்கு செலுத்தீடுகளைச் செலுத்துவதற்காக
29. PFCA கணக்கிற்கு எதிராக அல்லது BFCA கணக்கிற்கு எதிராக மாத்திரம் மற்றும் அட்டையின் செலுத்தப்படாத நிலுவை செலுத்தப்படுவது உள்வரும் பண அனுப்பல் மூலம் அல்லது வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து நிதியங்கள் பரிமாற்றப்படாத ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அட்டை உரிமையாளர்/உரிமையாளர்கள்/தொழிலுக்காக வெளிநாடு செல்லும் சந்தர்ப்பத்தில் அட்டை வழங்கப்பட்ட வங்கிக்கு ஒப்படைப்பதற்கு உடன்படுதல் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு இலத்திரனியல் நிதிய பரிமாற்றல் அட்டை (EFTC) வழங்கப்படுகிறது.

இந்த பிரகடனம் இலங்கை மத்திய வங்கியின் செலாவணி கட்டுப்பாட்டு திணைக்கள பணிப்பாளருக்கு வழங்கப்படுகிறது.

……………………………………………………………………………………………………………
……………………………………. (முதன்மை அட்டை உரிமையாளர் / மேலதிக அட்டை உரிமையாளர்)
……………………………………………………………………………………………………………
(முதன்மை அட்டை உரிமையாளர் / மேலதிக அட்டை உரிமையாளர்) ஆகிய நான்/நாம் இந்த படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் பிரகடனப்படுத்துகிறேன்/றோம்.

வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க இலத்திரனியல் நிதிய பரிமாற்ற அட்டை(EFTCs) தொடர்பான நிபந்தனைகள்பற்றி நான்/நாம் அறிந்துள்ளோம் என்பதையும் அந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு வெளிநாட்டு செலாவணி கொடுக்கல்வாங்கலுக்கு அட்டையைப் பயன்படுத்த முடியும் என்பதை அறிந்துள்ளோம் என்பதையும் நான்/நாம் இத்தால் உறுதிப்படுத்துவதோடு, அந்த நிபந்தனைகளுக்கு கட்டுப்பட இத்தால் நான்/நாம் உடன்படுகிறேன்/றோம்.

எனக்கு/எமக்கு வழங்கப்பட்டுள்ள இலத்திரனியல் நிதிய பரிமாற்ற அட்டையைப் பயன்படுத்தி நான்/நாம் மேற்கொண்ட வெளிநாட்டு செலாவணியை பரிமாற்றுவது பற்றி செலாவணி சட்டத்தின் நோக்கத்தின் பொருட்டும் மக்கள் வங்கிக்குத் தேவையான சந்தர்ப்பங்களில் அதுபற்றி எந்த தகவலையும் வழங்குவதற்கும் கட்டுப்படுவதற்கு இத்தால் நான்/நாம் மேலும் உடன்படுகிறேன்/றோம்.

எனக்கு/எமக்கு வழங்கப்பட்டுள்ள இலத்திரனியல் நிதிய பரிமாற்ற அட்டையைப் பயன்படுத்தி அங்கீகரிக்கப்படாத வெளிநாட்டு செலாவணி கொடுக்கல்வாங்கல் இடம்பெறுவதாக சந்தேகப்படக்கூடிய போதியளவு காரணிகள் இருப்பதாகத் தென்பட்டால் அந்த இலத்திரனியல் நிதிய பரிமாற்ற அட்டையின் மூலம் பெறக்கூடிய வெளிநாட்டு செலாவணியை அதிகாரம் பெற்ற முகவரால் (வங்கி) இடைநிறுத்த முடியும் என்பதை நான்/நாம் அறிவேன்/வோம்.

2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணம் தூய்தாக்கல் தடுப்புச் சட்டம் மற்றும் 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு பணம் வழங்குவதை தடுக்கும் சட்டம் என்பவற்றில் உள்ளடங்கியுள்ள நிபந்தனைகள் தொடர்பாக அறிந்துள்ளமையை நான்/நாம் உறுதிப்படுத்துகிறேன்/கிறோம். இலத்திரனியல் வாணிப/இணையத்தள கொடுக்கல்வாங்கல் வசதியை செயற்படுத்துதல்

நான்/நாம் வெளிநாட்டு தொழிலுக்காக இலங்கையிலிருந்து புறப்படுவதற்கு அல்லது குடிபெயர்வதற்கு முன்னர் எனக்கு/எமக்கு வழங்கப்பட்டுள்ள இலத்திரனியல் நிதிய ஒப்படை அட்டையை/களை மக்கள் வங்கிக்கு ஒப்படைப்பதற்கு உடன்பட நான்/நாம் வாக்குறுதியளிக்கிறேன்/றோம்.

………………… ……………………………………………
திகதி முதன்மை அட்டை உரிமையாளரின் ஒப்பம்

………………… ……………………………………………
திகதி மேலதிக அட்டை உரிமையாளரின் ஒப்பம்

நான் அதிகாரம் பெற்ற அலுவலர் என்ற வகையில் விண்ணப்பதாரரால்/ விண்ணப்பதாரர்களால் வழங்கப்பட்ட தகவல்களையும் அவற்றுடன் தொடர்புடைய பத்திரங்களையும் மிக அக்கறையுடன் பரிசீலித்தேன். இந்த தகவல்களும் பத்திரங்களும் சரியானவை என்பதை உறுதிசெய்கிறேன். இலத்திரனியல் நிதிய பரிமாற்ற அட்டை உரிமையாளர் அவருடைய அட்டையைப் பயன்படுத்தி மேற்கொள்ளுகின்ற வெளிநாட்டு செலாவணியுடன் தொடர்புடைய கொடுக்கல்வாங்கல் தொடர்பாக எச்சரிக்கையாக இருப்பதற்கு வாக்குறுதியளிப்பதோடு அட்டை உரிமையாளர்/உரிமையாளர்கள் வழங்கிய வாக்குறுதி பிரகடனத்தை மீறி இலத்திரனியல் நிதிய பரிமாற்ற அட்டையைப் பயன்படுத்தி அதன் மூலம் அங்கீகரிக்கப்படாத வெளிநாட்டு செலாவணி கொடுக்கல்வாங்கல் இடம்பெறுவதாக சந்தேகப்படக்கூடிய போதியளவு காரணிகள் இருப்பின் அந்த இலத்திரனியல் நிதிய பரிமாற்ற அட்டையின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய வெளிநாட்டு செலாவணியை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும், அத்தகைய மீறல்கள் தொடர்பான விடயத்தை இலங்கை மத்திய வங்கியின் செலாவணி கட்டுப்பாட்டு திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் வாக்குறுதியளிக்கிறேன்.

……………………… ……………………………………………..
திகதி அதிகாரம் பெற்ற அலுவலரின் கையொப்பம்

## இலத்திரனியல் தொடர்பாடல் தொடர்பான பிரகடனம்

1. நான்/நாம் மேற்கொள்ளுகின்ற இலத்திரனியல் வங்கி வசதிகளுக்கு உரியதாக உருவாகின்ற குறுஞ் செய்தி, எனது/எமது கணக்குகள் தொடர்பான இலத்திரனியல் கணக்கு கூற்று/கூற்றுகள் மற்றும் ஒருமுறை மாத்திரம் உருவாகும் இரகசிய இலக்கத்தைப்(OTP) பெற்றுக்கொள்ளுவதற்காக எனது/எமது கையடக்க தொலைபேசி இலக்கத்தை மின்னஞ்சல் முகவரியை பதிவுசெய்க/இற்றைப்படுத்துக.

2. நான் இந்த சிம்மை எனது தனிப்பட்ட நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதோடு, இந்த சிம்மின் இலக்கம் எனது கையடக்க தொலைபேசி இலக்கமாகும். குறித்த வசதியை/வசதிகளை, சேவையை/சேவைகளை வழங்குவதற்காகப் பயன்படுத்தும் பொருட்டு இந்த இலக்கத்தை எனது கையடக்க தொலைபேசி இலக்கமாகப் பதிவு செய்ததன் பின்னர், இந்த இலக்கத்தின் மூலம் மக்கள் வங்கியிடமிருந்து இணையத்தள வசதிகளை /கையடக்க தொலைபேசி வங்கி வசதிகளை மற்றும் ஏனைய ஏதேனும் வசதியை/அல்லது சேவையை எனக்கு வழங்கியதன் பின்னர் மற்றும் அத்தகைய வசதியை/வசதிகளை, சேவையை/சேவைகளை வழங்குவதற்காக இந்த கையடக்க தொலைபேசி மூலம் மேற்கொள்ளப்பட்ட வங்கி கொடுக்கல்வாங்கல் தொடர்பான முழுப்பொறுப்பை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன்.

3. கையடக்க தொலைபேசி இலக்கத்தில் அல்லது மின்னஞ்சல் முகவரியில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால் அதுபற்றி வங்கிக்கு அறிவிப்பதற்கும் இந்த சேவையைப் பயன்படுத்துவதற்காக ஏற்புடையதான நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு செயலாற்றுவதற்கு நான்/நாம் உடன்படுகிறேன்/றோம். இந்த சேவையைப் பயன்படுத்தும்போது நான்/நாம் வழங்குகின்ற கட்டளைகளை செயற்படுத்தும்போது ஏதேனும் உரித்து கோரல், பதிலீடு, சேதம், நட்டம் கட்டணம், செலவு மற்றும் பாதிப்பு வங்கிக்கு ஏற்பட்டால் அவை அனைத்தையும் ஈடு செய்வதற்கு நான்/நாம் உடன்படுகிறோம்.

4. விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட இலத்திரனியல் தொடர்பு பற்றிய தகவல்களை புதிய தகவல்களாகக் கருதுவதற்கும் அதன்படி முறைமையில் இற்றைப்படுத்துவதற்கும் வங்கிக்கு பூரண உரிமை உண்டு.

## குறுஞ்செய்தி மற்றும் கையடக்க தொலைபேசி வங்கிச்சேவைக்கான நியதிகளும் நிபந்தனைகளும்

1. பதிவுசெய்யப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு தனிப்பட்ட அடையாள இலக்கம்/இரகசிய சொல் வழங்கப்படும். அதை மற்றவர்களுக்கு தெரிவித்தலாகாது.

2. வியாபார ஊக்குவிப்பு தகவல்கள் உள்ளடங்கிய அல்லது வங்கி வெளியிடுகின்ற ஏனைய குறுஞ் செய்திகள் வாடிக்கையாளருக்கு அவ்வப்போது கிடைக்கும். அக்குறுஞ் செய்திகளுக்கு (கட்டணம் அறவிடும் குறுஞ்செய்திகளைத் தவிர்த்து) வாடிக்கையாளரிடமிருந்து கட்டணம் அறவிடப்பட மாட்டாது. இந்த சேவைக்கு பதிவுசெய்துகொள்ளுவதன்மூலம் அத்தகைய குறுஞ் செய்திகளைப் பெற்றுக்கொள்ள வாடிக்கையாளர் சம்மதம் தெரிவிக்கிறார்.

3. இந்த சேவைக்கு ஈடுபடுத்துகிற சேவை வழங்குநரால் தீர்மானிக்கப்படுகின்ற “SMS” (குறுஞ் செய்திக்கான) கட்டணம் அறவிடும் உரிமை வாடிக்கையாளாருக்கு மேற்படி தொலைபேசி சேவையை வழங்குபவர் வசமுண்டு. அக்கட்டணத்தை வாடிக்கையாளர் ஒழுங்காக செலுத்தி முடிக்க வேண்டும். அக்கொடுப்பனவுக்கு வங்கி பொறுப்பேற்காது.

4. வாடிக்கையாளர் வங்கிக்கு அனுப்புகின்ற குறுஞ் செய்திகளை வங்கி அங்கீகரித்துள்ள மாதிரிக்கு அமைவாக அனுப்ப வேண்டும். வங்கி அங்கீகரித்துள்ள மாதிரியை இணங்கியொழுகாத குறுஞ் செய்திகளை வங்கி ஏற்றுக்கொள்ளலாம்/ஏற்றுக்கொள்ளாமல் விடலாம். அத்தகைய அறிவுறுத்தல்களை செயற்படுத்துவதற்கு அல்லது செயற்படுத்தாமல் விடுவதற்கு வங்கி பொறுப்பு வகிக்காது.

5. தரவுகள் இல்லாமற் போதல் அல்லது முழு அல்லது பாதி செய்தியை அல்லது தகவலை மாற்றுதல் அல்லது தவறான தகவலை வங்கி செயற்படுத்தாதன் அடிப்படையில் வங்கி அல்லது தொலைபேசி சேவை வழங்குநர் பொறுப்புக்கூற மாட்டாது.

6. எந்த நிலைமையின் கீழும் குறுஞ்செய்தி அல்லது தரவுகள் ஊடுகடத்தப்படும்போது காணாமற் போதல் மற்றும் சேதமடைதல் தொடர்பாக அல்லது பதில் தாமதமடைதல்பற்றி அல்லது “SMS” செய்தியின் உள்ளடக்கம் தொடர்பாக வங்கி அல்லது தொலைபேசி சேவை வழங்குநர் பொறுப்புக்கூற மாட்டாது.

7. சேவை துண்டிப்பு காரணமாக அல்லது சேவை வழங்கல் எந்தவொரு சந்தர்ப்பத்தில் அல்லது அவ்வப்போது இல்லாமற்போகும்போது வாடிக்கையாளருக்கு ஏற்படும் நட்டம், சேதம் அல்லது அசௌகரியம் தொடர்பில் வங்கி அல்லது தொலைபேசி சேவை வழங்குநர் பொறுப்புக்கூற மாட்டாது. சேவை வழங்கும் ஆற்றலின் மீதே இச்சேவை வழங்கப்படுகிறது.

8. இந்த சேவை இலங்கையில் வலுவில் உள்ள சகல சட்டங்கள் விதிகள் ஒழுங்குவிதிகள் மற்றும் வங்கியின் கொடுக்கல்வாங்கலுக்கு இற்றைப்படுத்தப்பட்டு வலுவில் இருக்கின்ற நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு அதன் பிரகாரம் இந்த சேவை மூலம் வாடிக்கையாளர் வழங்கும் அறிவுறுத்தல்களை செயற்படுத்தாமலிருக்க நியாயமான காரணம் (வங்கியின் பூரண தற்றுணிபின்படி) இருப்பின் அத்தகைய அறிவுறுத்தல்களை செயற்படுத்துவதற்கு, நிராகரிப்பதற்கு அல்லது அத்தகைய அறிவுறுத்தல்களை செயற்படுத்தாமல் இருப்பதற்கு பூரண அதிகாரம் வங்கிக்கு உண்டு. மேலும் வங்கியின் தற்றுணிபின்படி நியாயமான காரணம் இருந்தால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவரேனும் வாடிக்கையாளருக்கு இந்த சேவை வழங்கலை நிறுத்துவதற்கு வங்கிக்கு தற்றுணிபு சார்ந்த அதிகாரம் உண்டு.

9 .இந்த நியதிகளையும் நிபந்தனைகளையும் காலத்திற்குக் காலம் மாற்றுவதற்கு, திருத்துவதற்கு, பதிவழிப்பதற்கு அல்லது எந்த விதமாகவும் திருத்துவதற்கு அல்லது முழுமையாக மீளமைப்பதற்கு இந்த நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் புதிய நியதிகளையும் நிபந்தனைகளையும் சேர்ப்பதற்கு முழு அதிகாரம் வங்கிக்கு உண்டு. அத்தகைய சகல மாற்றங்களுக்கும் திருத்தங்களுக்கும் வாடிக்கையாளர் கட்டுப்படுகிறார். இந்த சேவையைத் தொடர்ந்து பயன்படுத்துவதன் மூலம் வாடிக்கையாளர் அவ்வாறு கட்டுப்படுவதற்கு இதன்மூலம் பிரகடனப்படுத்துகிறார்.

10. இந்த சேவையை வழங்குவதற்கு வாடிக்கையாளர்களிடமிருந்து அவ்வப்போது அறவிடுவதற்கு வங்கி குறிப்பிடுகின்ற கட்டணங்களை வாடிக்கையாளர் செலுத்த வேண்டியிருக்கும்.

11 .ஏதேனும் இயந்திரமொன்று, கணினி முறைமை அல்லது ஊடுகடத்தல் தொடர்பு தோல்வியடைதல் அல்லது தரவு தயாரிப்பில் தாமதம் அல்லது தொழில்நுட்ப கோளாறு காரணமாக அல்லது வங்கியின் மற்றும் அதன் ஊழியர்களின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் சென்ற காரணத்தினாலும் ஏனைய செயலிலப்பு அல்லது கையடக்க தொலைபேசியில் ஏதேனும் பிழை காரணமாக இந்த ஏற்பாடுகளின் கீழ் தனது பொறுப்பை நிறைவேற்ற தவறுவது தொடர்பில் வங்கி பொறுப்பேற்காது.

12. வரையறுக்கப்பட்ட சேவை இழப்பு, சேவை நியதிகளையும் நிபந்தனைகளையும் மீறுதல் அல்லது அவ்வப்போது வங்கியினால் அமைக்கக்கூடிய ஏனைய கொள்கைகள் உட்பட எந்தக் காரணத்தினாலும் வங்கிக்கு சேவையை முடிவுறுத்த முடியும்.சேவைகளை முடிவுறுத்தியதன் பின்னர் நான்/நாம் மேற்கொண்ட சகல கொடுக்கல்வாங்கலுக்கு கொடுப்பனவை செலுத்த நான்/நாம் கட்டுப்பட்டுள்ளோம். சேவையை முடிவுறுத்தியதன் பின்னர் எனது /எமது சேவை பிரவேசத்தை தடைசெய்வதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

13 இந்த நியதிகளையும் நிபந்தனைகளையும் வங்கியின் தற்றுணிபின் பிரகாரம் திருத்துவதற்கு அல்லது மாற்றுவதற்கு வங்கிக்கு எந்த நேரத்திலும் இயலும் என்பதை நான்/நாம் அறிவோம். ஏற்றுக்கொள்ளுகிறோம்.அத்தகைய திருத்தங்கள் சேர்க்கைகள் அல்லது மாற்றங்கள் ஆகியவற்றிற்கு நான்/நாம் கட்டுப்படுகிறேன்/றோம்

## அட்டைகள் இன்றி பணம் மீளப் பெறுவதற்கு ஏற்புடையதான நியதிகளும் நிபந்தனைகளும்

1. எனது/எமது கோரிக்கை பிரகாரம் குறித்த வசதிகளுக்காக பதிவுசெய்ததன் பின்னர் அட்டையின்றி பணம் மீளப் பெறல் மேற்கொள்ளப்பட்ட அனைத்து கொடுக்கல்வாங்கல் தொடர்பான பொறுப்பை நான்/நாம் ஏற்கின்றேன்/ஏற்கின்றோம்.
2. குறித்த முறைமைக்கு தேசிய அடையாள அட்டை (NIC) மற்றும் ஒருமுறை மாத்திரம் உருவாகின்ற காவற் சொல்லை (OTP) பதிந்ததன் பின்னர் அட்டையற்ற பணம் மீளப் பெறல் (CARD-LESS CASH) அடிப்படையில் கொடுக்கல்வாங்கலை செயற்படுத்துவதற்கு வங்கிக்கு அதிகாரம் ஒப்படைக்கப்படுகிறது.
3. ஒருமுறை மாத்திரம் உருவாகின்ற காவற் சொல் (OTP) கிடைக்காமைபற்றி வங்கிக்கு அறிவிக்கும் பொறுப்பை நான்/நாம் கொண்டிருக்கிறேன்/றோம்.
4. கையடக்க தொலைபேசி சேவை வழங்குநரின்(MOBILE SERVICE PROVIDER) தவறுகள்/பிழைகள்/சிக்கல்கள்/தொழில்நுட்ப துண்டிப்புகள் என்பவை காரணமாக தோன்றுகின்ற ஏதேனும் பிரச்சினைகள்/நட்டங்கள் தொடர்பாக நான் வங்கியை சேத காப்புறுதி செய்கிறேன்.

மேலுள்ள நியதிகளையும் நிபந்தனைகளையும் வங்கியின் பூரண தற்றுணிபின் பிரகாரம் திருத்துவதற்கு, சேர்ப்பதற்கு அல்லது மாற்றுவதற்கு வங்கிக்கு எந்த சந்தர்ப்பத்திலும் உரிமை உண்டு என்பதை நாம்/நாம் ஏற்றுக்கொள்ளுகிறேன்/றோம். அத்தகைய திருத்தங்கள் சேர்க்கைகள் அல்லது மாற்றங்கள் என்பவற்றிற்கு நான்/நாம் கட்டுப்படுகிறேன்/றோம். மேற்குறிப்பிட்ட தகவல்கள் சரியாக இருப்பதோடு மேலுள்ள வசதியை/வசதிகளை பயன்படுத்துவது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள், நியதிகள் மற்றும் பிரகடனங்கள் என்பவற்றிற்கு நான்/நாம் உடன்படுகிறேன்/றோம்.

இந்த நிபந்தனைகளையும் நியதிகளையும் வங்கியின் பூரண தற்றுணிபின் பிரகாரம் திருத்துவதற்கு அல்லது மாற்றுவதற்கு வங்கிக்கு எந்த நேரத்திலும் இயலும் என்பதை நான்/நாம் ஏற்றுக்கொள்ளுகிறேன்/றோம் அத்தகைய திருத்தங்கள் சேர்க்கைகள் அல்லது மாற்றங்கள் என்பவற்றிற்கு நான்/நாம் கட்டுப்படுகிறேன்/றோம்.

..............................................
திகதி

..............................................................................................
வாடிக்கையாளரின்/களின் கையொப்பம்/ஒப்பங்கள்

## அலுவலக பாவணைக்கு மாத்திரம்

..................................................................
வாடிக்கையாளரின்/களின் கையொப்பத்தை உறுதிப்படுத்துகிறேன்
(அதிகாரம் பெற்ற அலுவலரின் ஒப்பம்)

..................................................................
வாடிக்கையாளரின்/களின் கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொண்டதன் பின்னர் அங்கீகரிக்கிறேன்.
(முகாமையாளர்)

| | பெயர் | சேவை இலக்கம் | திகதி |
|---|---|---|---|
| இரகசிய இலக்கத்தை வழங்குதல் | | | |
| குறுஞ் செய்தி சேவையை செய்ற்படுத்துதல் | | | |
| அட்டை இன்றிய பணக்கொடுக்கல்வாங்கல்சேவையை செயற்படுத்துதல் | | | |
| கையடக்க தொலைபேசி வங்கிச்சேவை வசதியை செயற்படுத்துதல் | | | |
| அளிக்கும் சேவையை செயற்படுத்துதல | | | |
| அழைப்புக்கு பதி Missed Call Top Up வங்கிச்சேவையை செயற்படுத்துதல் | | | |
| இலத்திரனியல் வாணிப இணையத்தள கொடுக்கல்வாங்கல் வசதியை செயற்படுத்துதல | | | |